# தமிழுக்குத் தொண்டாற்றியோருக்கு

Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU
தொலைபேசி எண். 49
National Tamil Daily
மலர் 9
இதழ் 325
தேசிய தினசரி
புரட்டாசி [illegible] மார்கழி 19 ஷவ்வால் 2 புதன்கிழமை [3-1-68]

## நினைவுச் சிலைகள்

### சென்னையில் நிறுவப்பட்டன

சென்னை, ஜன. 2

திருவள்ளுவர், கண்ணகி, கம்பர், ஔவையார், ஜி யு. போப் கார்டுவெல், பாரதியார் உட்பட தமிழுக்கும் தமிழினத்துக்கும் தொண்டாற்றிய பதினொரு பெரியார்களைக் கௌரவிக்குமுகமாக சென்னை மெரினகடற்கரை மைதானத்தில் நிறுவப்பட்டுள்ள சிலைகள்இன்று மாலை திறந்து வைக்கப்பட்டன.

இரண்டாவது உலகத்தமிழாராய்ச்சி மகாநாட்டையொட்டிஇச்சிலைகள் நிறுவப்பட்டுள்ளன. இச்சிலைகள் தனிப்பட்டவர்களினாலும் பொது சமய, சமூக ஸ்தாபனங்களினாலும் நிறுவப்பட்டிருக்கின்றன.

---

தமிழ்மொழியின் ஒருமுகவளர்ச்சிக்கு ஏற்பாடு

# சர்வதேச தமிழாராய்ச்சி கழகம் சென்னையில் உருவாகும்

## தமிழ் நாட்டின் தலைநகர் விழாக்கோலம்பூண்டுள்ளது

### இரண்டாவது உலக தமிழாராய்ச்சி மகாநாடு இன்றுமாலை ஆரம்பம்

சென்னை, ஜனவரி 2

தமிழ்மொழி பற்றிய ஆராய்ச்சிசெய்வதற்கென சென்னையில் சர்வதேச கழகம் ஒன்று நிறுவப்படும். இத்தகவலை உலகத்தமிழாராய்ச்சி மகாநாட்டின் கூட்டுப் பொறுப்பாளரான திரு. சுப்பையா அறிவித்துள்ளார்.

உலகின் பல பாகங்களிலும் தனிப்பட்டவர்களும், ஸ்தாபனங்களும் நடத்தும் தமிழாராய்ச்சிகள் பற்றிய தகவல்கள் மற்ற அறிஞர்களுக்கும் கிடைத்து மேற்கொண்டும் ஆராய்ச்சிகள் தொடர்வதற்கு இந்த நிலையம் வழிவகுக்கும் என்று திரு. சுப்பையா கூறினர்.

தமிழ்மொழிபற்றி பல்வேறு நாடுகளிலும் அறிஞர்கள் நடத்தியுள்ள ஆராய்ச்சிகள் பற்றியும். தமிழ்மொழியின் தொன்மைநிலை இன்றைய வளர்ச்சிகள் பற்றியும் விவாதிக்கவும், கருத்துப்பரிவர்த்தனை செய்துகொள்ளவும் சென்னையில் நடக்கும் தமிழாராய்ச்சி மகாநாட்டில் சந்தர்ப்பம் கிடைக்குமென்று தமிழாராய்ச்சிமகாநாட்டின் பொதுக்காரியதரிசியான செக்கோஸ்லோவேகியாவைச் சேர்ந்த அறிஞர் கமில் சுவபில் தெரிவித்துள்ளார்.

தமிழ் நாட்டின் தலைநகரான சென்னை மாநகரில், இரண்டாவது உலக தமிழ் ஆராய்ச்சி மகாநாடு நாளை காலை ஆரம்பமாகிறது. இம்மகாநாட்டில் கலந்துகொள்ள உலக தமிழ் அறிஞர்கள் இங்குவந்து சேர்ந்துள்ளனர்.

மலேசியா, இலங்கை, சிங்கப்பூர், மற்றும் வெளிநாடுகளிலிருந்தும், தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் லட்சக்கணக்கான மக்கள் சென்னையை நோக்கி தினமும் ஆயிரக்கணக்கில் புகையிரதம், பஸ்கள், தனிப்பட்ட வாகனங்களிலும் சென்னை நகரை நோக்கி திரண்டு வந்த வண்ணமிருக்கின்றனர். சென்னைக்கு வரும் மக்கள் நண்பர்களின் விடுகளிலும், ஹோட்டல்களிலும், பொது நிலையங்களிலும் தங்கியுள்ளனர். வெளியூர்களிலிருந்து வரும் மக்களை சென்னை வாழ்தமிழ் மக்கள், அன்புடன் வரவேற்று அவர்களுக்கு ஏற்ற ஒழுங்குகளை செய்துகொடுக்கின்றனர்.

சென்னை மாநகராட்சி மன்றத்தின் கோபுரம், தீபங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. ரிப்பன் கட்டிடத்தில் விழா தீபாலங்காரத்திற்கு 25,000 ரூபா செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

சென்னை நகரம் முழுவதுமே விழாக்கோலம் பூண்டுள்ளது. இல்லங்கள், வர்த்தகநிலையங்கள், பொதுஸ்தாபனங்கள் பலவிதமாக அலங்கரிக்கப்பட்டுள்ளன.

தமிழாராய்ச்சி மகாநாட்டையொட்டி நாளைக் காலை 9 மணிக்குச் சென்னை பல்கலைக்கழகத் தேர்வு மண்டபத்தில் சர்வதேச வர்த்தகப் பொருட்காட்சி ஆரம்பமாகும். இப்பொருட்காட்சியின் ஆரம்பவிழாவின்போது ராஜாஜி சிறப்புரை நிகழ்த்துவார்.

சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டுவிழா மண்டபத்தில் நாளை ஆரம்பமாகும் கருத்தரங்கில் 32 உலக நாடுகளைச் சேர்ந்த நூற்றுக்கு மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்துகொள்வார்கள்.

[illegible] தமிழில் அல்லது ஆங்கிலத்தில் பிரதி

[6-ம் பக்கம் பார்க்க]

---

இரண்டாவது சாதனை

## வெள்ளையருக்கு கறுப்பரின் இருதயம்

ஜோகனஸ்பேர்க், ஜன. 2

தென்னாபிரிக்க டாக்டர்கள் இறந்த ஒருவரின் இருதயத்தை உயிருடனிருக்கும் ஒரு நோயாளியின் இருதயத்துக்கு பதிலாகப பொருத்தும் தமது இரண்டாவது முயற்சியை இன்று மேற்கொண்டார்கள்.

இந்த முயற்சியில் கறுப்பு நிறத்தவரான ஒரு 24 வயது இளைஞரின் இருதயம் 54 வயதான வெள்ளையரின் உடலில் பொருத்தப் பட்டது.

கறுப்பரின் இருதயத்தைப் பொருத்திக்கொள்ள வெள்ளையருக்கு சம்மதமா என்று ஆபரேஷனுக்கு முன் டாக்

[6-ம் பக்கம் பார்க்க]

---

## 'தமிழுக்கும் தமிழர்க்கும் சிறந்த தொண்டாற்றியவர்'

### அண்ணா சிலைதிறப்பு விழாவில் டாக்டர் ராமசாமி முதலியார்

சென்னை, ஜன. 2

தமிழக முதல்மந்திரி திரு. சி. என். அண்ணாதுரையின் சிலை நேற்று இங்கு டாக்டர் ராமசாமி முதலியாரினால் திறந்து வைக்கப்பட்டது.



தமிழர்களுக்கும், தமிழ் மொழிக்கும் அண்ணா ஆற்றி வரும் சேவைகளை டாக்டர் ராமசாமிமுதலியார்பாராட்டினர்

இந்திமொழி விஷயத்தில் அண்ணா எடுத்துக்கொண்டுள்ள நிலையைக்குறிப்பிட்ட டாக்டர், கன்யாகுமரி தொடக்கம் விசாகப்பட்டினம்வரையுள்ள தென்னக

[6-ம் பக்கம் பார்க்க]

---

## ஷேக் அப்துல்லா மீதான கட்டுப்பாடுகள் நீக்கம்

புதுடில்லி, ஜன. 2

காஷ்மீர் சிங்கம் ஷேக் அப்துல்லா மீது விதிக்கப்பட்டிருந்த எல்லா கட்டுப்பாடுகளும் இன்று பூரணமாக நீக்கப்பட்டுவிட்டன. கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதும் ஷேக் அப்துல்லா மசூதியொன்றுக்கு சென்று தொழுகையில் கலந்துகொண்டார். ஈதுல் பிதர் விழாவையொட்டி அவர் முஸ்லீம்கள் மத்தியில் பேசியபோது பாரதம் இங்குள்ள முஸ்லிம்களின் சொந்த நாடு. அதன் நலனுக்காக அவர்கள் உழைக்க வேண்டும். பாகிஸ்தானுக்கும் — பாரதத்துக்குமிடையில் சண்டை ஏற்படாமலும் அவர்கள் பார்த்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

செந் தமிழ் நாடெனும் போதினிலே
இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே
எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே
ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே

— பாரதியார்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389

யாழ்ப்பாணம் பிலவங்கஸ்ரீ மார்கழி மீ 19உ (3-1-68)


## தமிழர் பெருமை

தமிழ்நாட்டின் தலைநகரம் சென்னை மாநகரம் விழாக்கோலம் பூண்டுள்ளது ஆமாம், சங்கம் வைத்து மொழி வளர்த்த தமிழர்கள், உலகின் பல பாகங்களுக்கும் பண்பாட்டையும் நாகரிகத்தையும் பரப்பியவர்கள் என்ற பெயர் பெற்ற தமிழர்கள் முன்னாளில் எப்படி வாழ்ந்தார்கள், இந்நாளில் எப்படி வாழ்கிறார்கள், முன்னாளில் பெற்றிருந்த ஏற்றம் இந்நாளில் குறைந்தது ஏன், பழைய நிலையை மீண்டும் பெறுவதற்கு என்ன வழி என்பது பற்றி ஆராய்வதற்காக சென்னையில் இன்று தமிழ் அறிஞர்கள் கூடுகிறார்கள். இன்று தொடக்கம் ஒரு வார காலத்துக்கு அவர்கள் தமிழின் - தமிழரின் அன்றைய நிலை பற்றியும் இன்றைய நிலை பற்றியும் ஆராய விருக்கிறார்கள்; ஆராயவேண்டும். தமிழுக்கு விழா எடுத்தால் மட்டும் போதாது, தமிழ் மொழியினதும், தமிழ் மக்களினதும் அன்றைய நிலை பற்றியும் இன்றைய நிலை பற்றியும் ஆராய்ந்து மீண்டும் தமிழ் மொழியும் தமிழ் மக்களும் பழைய நிலையையும் பெருமையையும் அடையவேண்டும் என்ற நோக்கத்துடனேயே உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கழகம் ஆரம்பிக்கப்பட்டது இக்கழகத்தின் முதல் ஆராய்ச்சி மகாநாடு மலேசியாவில் நடைபெற்றது. இன்று தமிழ் நாட்டின் தலைநகரான சென்னையில் இரண்டாவது மகாநாடு ஆரம்பமாகிறது.

தமிழாராய்ச்சி மகாநாடு அண்மையில் உள்ள சென்னை நகரில் நடைபெற்றாலும், இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் பலரும் — இம்மகாநாட்டைப் பார்க்கவேண்டுமென ஆவலுள்ளவர்கள், அங்குசெல்லக் கூடிய வாய்ப்புக் கிடைக்கவில்லை. மகாநாட்டில் கலந்துகொண்டு, மகாநாட்டில் கலந்துகொள்ளும் அறிஞர்களையும் அவர் தம் கருத்துக்களையும் நேரில் காணவும் கேட்கவும் வாய்ப்புப் பெற்றவர்கள் பாக்கியசாலிகள் என்று ... தமிழ் நாட்டில் நடைபெறும், அதுவும் தமிழின் வளர்ச்சியில் தமிழ் மொழிக்கு புரட்சியையும், தமிழ்பேசும் மக்களுக்கு இக்காலத்தில் புத்துணர்ச்சியையும் ஏற்படுத்திய திரு. சி. என். அண்ணாதுரை தலைமையில் அமைந்த திராவிடமுன்னேற்றக்கழகம் தமிழ்நாட்டில் ஆட்சி பீடமேறியிருக்கும் இக்காலத்தில் நடைபெறும் தமிழாராய்ச்சி மகாநாட்டின் நிகழ்ச்சிகளைக் கண்டு களிக்க முடியாவிட்டாலும் தமிழ்கூறும் நல்லுலகம் அனைத்தும் அந்த மகாநாட்டை மனக்கண்களால் பார்த்து மகிழ்ந்து கொண்டிருக்கிறது. இதுபோதாது. இலங்கையிலுள்ள சில பொதுஸ்தாபனங்கள் கோரியிருப்பது போல தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டுநிகழ்ச்சிகள் வைபவங்களை திரைப்படமாக்கி, தமிழ்கூறும் நல்லுலகமெங்கும் திரையிட்டுக் காட்டுவது தமிழ் பேசும் மக்களை ஓரளவாவது திருப்திப்படுத்தும். தமிழ்மக்கள்வாழும் நாடுகளில் மட்டுமல்லாது தமிழ்பேசும் மக்கள் வாழாத நாடுகளிலும் இம்மகாநாடுபற்றிய திரைப்படம் காட்டப்படவேண்டும். தமிழ்மொழியின் சிறப்பையும், தமிழ் மக்களின் அன்றைய நிலையையும் பிரதிபலிக்கக்கூடியதாக நடைபெறும் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டின் நிகழ்ச்சிகளைத் திரைப்படமாக வெளிநாடுகளில் திரையிடுவதன்மூலம் பிறநாடுகளில் தமிழின், தமிழரின்சிறப்புப்பற்றி அறிய வைக்க வாய்ப்பேற்படும்.

மலேசியாவில் நடைபெற்ற முதலாவது தமிழாராய்ச்சி மகாநாட்டில் சிலபல குறைகள் ஏற்பட்டதாக அந்த மகாநாட்டில் கலந்துகொண்ட தமிழறிஞர்கள் சிலர் தெரிவித்தனர். இக்குறைகளை இன்று ஆரம்பமாகும் இரண்டாவது தமிழாராய்ச்சிமகாநாடு நீக்கிவிடும் என்று நம்பலாம். தமிழ் நாட்டில் நடைபெறும் இம்மகாநாட்டில் விட்ட குறை, தொட்ட குறைகளை நிவர்த்திசெய்து கொண்டு, தமிழ்மொழி பற்றியும் தமிழர்பற்றியும் குறைந்த மதிப்பிடும் நாடுகளிலும், தமிழ் மொழிபற்றி அறியாத, அறியவிரும்பாத மேற்கத்தியநாடுகளில் வருங்காலத்தில் இந்த மகாநாடுகள் நடைபெற ஒழுங்கு செய்யப்படவேண்டும்.

தமிழ்நாட்டின் தலைநகரில் இன்று ஆரம்பமாகும் உலகத் தமிழாராய்ச்சிக் கழகத்தின் இரண்டாவது மகாநாட்டில் கலந்து கொள்ளும் தமிழரல்லாத அதாவது தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாத பிறநாட்டு அறிஞர்களுக்கும், இம்மகாநாட்டை யொட்டி பழந்தமிழர் வாழ்க்கையைச் சித்திரிக்கும் நூல்களையும், அலங்காரப் பவனிகளையும், கண்காட்சிகளையும் ஒழுங்குசெய்து மற்றும் பல விதத்திலும் தமிழ்மொழியின் சிறப்பையும், பழந்தமிழரின் வாழ்க்கையையும் எடுத்தியம்பும் முறையில் நிகழ்ச்சிகளை தயாரித்துள்ள தமிழக அரசாங்கத்துக்கும் தமிழ் கூறும் நல்லுலக மக்களுடன்சேர்ந்து நாமும் நமது உளம்நிறைந்த வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையுந் தெரிவித்துக்கொள்கிறோம். இதே சமயம் ... உலகத்தமிழ் ஆராய்ச்சி

### தமிழுக்கு இனிது காலம்

# சங்ககால ஆராய்ச்சி போல நடக்கும் தமிழ் ஆராய்ச்சி மகாநாடு

தமிழுக்கும் தமிழினத்திற்கும்பெரு மகிழ்ச்சியும் பெருபதிப்பும் தரக்கூடிய இரண்டாவது உலகத் தமிழ் மாகாநாடு இன்று தமிழக தலைநகரான சென்னை பட்டினத்தில் ஆரம்பமாகிறது.

சமீப நூற்றாண்டுகளில் தமிழ்வளர்ச்சி குன்றியதற்கு பலகாரணங்களுண்டு. சிலப்பதிகாரம், திருவாசகம் போன்ற அரிய நூல்கள் சமீப காலங்களில் வெளிவரவில்லை என்பதை தமிழ்ப்பற்றுள்ளவர் எவரும் ஒப்புக்கொள்ளுவார்கள்.

உ. வே. சாமிநாத ஐயர், ஆறுமுகநாவலர் போன்ற சில மேதைகளின் உதவியினால் அழிந்து போகவிருந்த பலதமிழ் நூல்கள் மீண்டும் உயிர் பெற்று நூல்வடிவில் வெளிவந்தன. ஆயினும் ஆக்க நூல்கள் எதுவும் குறிப்பிடத்தக்க தாயில்லை.

எனவே, உலகத் தமிழ் மகாநாட்டில், பல கூட்டுப் பேரறிஞர் கூடும் பேரவையில் தமிழ் வளர்ச்சி குன்றியதன் காரணத்தை ஆராய்ந்து அதைமீண்டும் ஓர் ஒப்பற்ற உலக மொழியாகவைப்பதற்கு முயற்சிகள் நடக்கும் என்பது நிச்சயம்.

தமிழ் அறிஞர்களும் எழுத்தாளர்களும் தமிழின் தொன்மையைப் பற்றியும், கம்பன், வள்ளுவன் ஆகியோரின் மேன்மையைப் பற்றியும் மணிக்கணக்காகப்பேசி வந்தார்களேயன்றி, சுப்பிரமணிய பாரதி ஒருவரைத் தவிர ஆக்க வேலைகள் செய்தவர்கள் மிகக் குறைவானவர்கள்.

இவ்விடத்தில், பிறமொழிச் சேர்க்கையினால் ஒரு மொழி வளம்பெறுகிறதா, மெலிவுகிறதா என்பதையும் தீவிரமாக ஆலோசிக்க வேண்டும்.

நாம் விரும்பியோ, விரும்பாமலோ வட மொழியும் ஆங்கிலமும் தமிழுடன் ஒன்றாக கலந்து அதற்கு நல்ல செழுமை கொடுத்துள்ளன. குறுகிய நோக்குடன் பிறமொழிச் சொற்களை தமிழிலிருந்து அகற்றுவோமாயின் தமிழ்வளம்பெறுமா என்பதை யோசிக்கவேண்டும் கிரேக்கமும், லத்தீனும், பிரெஞ்சும் இல்லாவிட்டால் இன்று ஆங்கிலம் இவ்வளவு பொலிவு பெற்று உலக மொழியாக விளங்க முடியுமா என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

தமிழாராய்ச்சி மகாநாடுகளை இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை உலகில் வெவ்வேறு பகுதிகளில் நடத்துவதென்று சர்வதேச தமிழ்ஆராய்ச்சி சங்கம் நினைத்திருக்கிறது. இது விஷயத்தில் முக்கிய காரணபூதராயிருந்தவர் ஈழம்பெற்றெடுத்த வண. தனிநாயக அடிகளார் என்பதை நினைக்க தமிழ் இனிக்கிறது. அவரது பெரும் முயற்சியால்தான் 1966ல் கோலாலம்பூரில் முதலாவது தமிழாராய்ச்சி மகாநாடு நடைபெற்றது.

அடிகளார் தமிழ் ஆராய்ச்சி சங்கத்தின் கூட்டுகாரியதரிசியாவர். மற்றவர் செக்கோஸ்லோவாகிய நாட்டை சேர்ந்த பேராசிரியர் கமில் ஸ்வெலமில் என்பவர். இவருடைய தமிழ் கட்டுரைகள் பல தமிழ் பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன.

பிறநாட்டு அறிஞர்களில் எத்தனைபேர் (முக்கியமாக ஐரோப்பியர்) இந்த தமிழ் ஆராய்ச்சி சங்கத்தில் அங்கம் வகிக்கிறார்கள் என்பதைப்பார்க்க நெஞ்சை அள்ளுகிறது.

### சர்வதேச தமிழ் ஆராய்ச்சி சங்கம்

தலைவர்: பேராசிரியர் ஜின் பிலியோஸட், பாரிஸ், பிரான்ஸ். உபதலைவர்கள்: பேராசிரியர் தொமஸ்பரோ ஒக்ஸ்போர்ட் பல்கலைக் [கழகம், இங்கிலாந்து, பேராசிரியர் எம். பி. மெனோ, கலிபோர்னியா பல்கலைக்கழகம் அமெரிக்கா, பேராசிரியர் எப் வி. ஜே. குபிப்பர், லைடன் பல்கலைக் கழகம், ஒல்லாந்து. பேராசியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரம், மதுரைபல்கலைக் கழகம், தமிழகம் கௌரவ நீதியரசர் எச். டபிள்யூ. தம்பையா, கியூ. சி., இலங்கை பேராசிரியர் மு. வரதராசன், சென்னைப் பல்கலைக் கழகம், தமிழகம்.

கழகத்துக்கும் தமிழக அரசாங்கத்துக்கும் ஒரு வேண்டுகோள்-

தமிழ்நாடு என்பது இன்றைய சென்னை ராஜ்யம் மட்டுமல்ல, 'சென்னை ராஜ்யம்' என்ற பெயரை தமிழ்நாடு என்று மாற்றியிருப்பது உலகில் பரந்து வாழும் தமிழ் மக்களுக்கு பெருமையும் நம்பிக்கையுமளிக்கிறது. ஆயினும் பண்டைய தமிழ்நடு பற்றியும், தமிழர் பண்பாடு, நாகரிகம் எங்கெல்லாம் பரவியிருந்தன என்பது பற்றியும் பண்டைய நூல்களில் இருந்து ஆராய்ந்தால் மட்டும் போதாது. ஆசிய நாடுகளில் பலவற்றினதும், ஐரோப்பிய நாடுகளினதும் ஒத்துழைப்புடனும் புதைபொருளாராய்ச்சி நிபுணர்களின் குழுவொன்றை அமைத்து, பாரபட்சமற்ற முறையில் உலக நாடுகள் பலவற்றிலும் தமிழரின் பண்டைக் கால வாழ்க்கைபற்றி ஆராய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

## இன்றைய பலன்

[3-1-68]

புதன்கிழமை
மார்கழி மீ 19 உ

நட்சத்திரம்- அவிட்டம்.

திதி- திருதியை காலை 6-47 மேல் சதுர்த்தசி.

சுபநேரம்- 5-01—6-31.

ராகுகாலம்- 12-31—2-01.

மேஷம்- அறிவுக்கு விருந்து, ஆராய்ச்சியின் ஆர்வம்.

ரிஷபம்- இருதயப் பூரிப்பு, இன்பத்தின் சாயல்.

மிதுனம்- அன்னிய வாசம், அகாலபோசனம்.

கடகம்-தென்றல்வீசும், தேன்சொட்டும் வாழ்வு.

சிம்மம்- சிநேகிதர் பகை, சிந்தையில் குழப்பம்.

கன்னி- புண்ணிய விருப்பு, போதுமென்ற மனம்.

துலாம்- பிரயாண விருப்பு, நினைவுச்சுழல்.

விருச்சிகம்- வரவில் உயர்வு, வாழ்த்துமுண்டு.

தனுசு- தொழில்கவலை, தொல்லைகள் பெருகும்.

மகரம்- அலைமோதும் மனம், அற்ப லாபம்.

கும்பம்- தனச் சிறப்பு, தானிய விருத்தி.

மீனம்- குடும்பசுகக் குறைவு, பிரிவுத்துயர்.

— சோதிடக்கலாநிதி —
திருமலை வேலுப்பிள்ளை

## நாட்டிலும் நகரிலும்

எல்லாதபாற் கந்தோர்த் தலைவருக்கும்,

பாதகாப்பு வெளிவிவகார அமைச்சால் வெளியிடப்பட்ட சிங்கலம், தமிழ், ஆங்கிலம் ஆகிய பாகையில் உல்ல ஒரு சுவரொட்டிப்பிரதிசித்துடன் அனுப்பப்ட்டுகிறது.

உமது காரியாலயத்தில் பிரசித்தமான பகுதியில்இச் சுவரொட்டியை பொதுஜன அரிவிப்புக்கா வைத்தலுக்கு நீரே நேரடியாக கவனிக்கவும்.

ஏ. எல். பேரேரா.
த. த. அதிதியும், தந்திப் போக்குவரத்து அதிபரும்

தமிழ் ஆராய்ச்சி மகாநாடு தொடங்கும் இந்த புனிதமான தினத்தில் இதென்ன 'கண்ருவி' என்று நீங்கள் கேட்கக் கூடும். ஆனால் உண்மையை ஒழிக்க முடியுமா?

மேற்கண்ட சுற்றுநிருபம் எழுத்துக்கள். வார்த்தைகள், சொற்கோர்ப்பு இலக்கணம், இலக்கியம் ஒன்றுமே மாற்றப்படாமல் அப்படியே பச்சையாகத் தரப்பட்டிருக்கிறது.

நமது சீர்பெறு சிறீலங்காவில் பொதுமக்களுடன் அதிகமாகத் தொடர்புகொள்ளும் ஒரு பெரும் அரசாங்கக் கந்தோர் இப்படி ஒரு நிருபத்தை வெளியிட்டிருக்குமாகில் நாவலன் பிறந்த இந்த நந்நாட்டுக்கு எவ்வளவு கேவலம்?

'பாதகாப்பு' செய்பவர் தான் இந்த மொழிபெயர்ப்பைச் செய்திருக்கிறார்கள் போலும், 'போக்கு வருத்து' என்பதை சொல்லாமலே விளங்குகிறது.

மொழிபெயர்ப்புப் பிரச்னை ஒரு பெரிய கரைச்சல், தமிழர் வாழும் இடங்களில் இந்தியாவிலும் இலங்கையிலும் மலேசியாவிலும் இன்னும் பல இடங்களிலும், தமிழில் மொழிபெயர்ப்பு பதிபல விதமாக நடைபெறுகிறது. இந்தியர் எழுதும் மொழி பெயர்ப்பு இலங்கையருக்கும், இலங்கையர் மொழிபெயர்ப்பு இந்தியருக்கும், இருவரும் எழுதும் மொழிபெயர்ப்பு மலேசியருக்கும் புரியாமல் எல்லோரும் தட்டுத்தடுமாறித் திரிகிறார்கள்.

இந்திய எழுத்தாளர் ஒரு வழி, இந்திய வானொலியார் ஒரு வழி, இலங்கை எழுத்தாளர் ஒரு வழி, இலங்கை வானொலிக்காரர் ஒரு வழி- இப்படியே ஒவ்வொருவரும் தாம் தாம் நினைத்த பிரகாரம் மொழிபெயர்ப்புச் செய்கிறார்கள்.

இதற்கிடையில் மேற்கண்டவாறு அரசாங்கப் பகுதிகளிலிருக்கும் மொழிபெயர்ப்பாளர்கள் இன்னொரு வழி.

இப்படிப் பல வழிகள் இருக்கும் வரையில் தமிழ், தலை குத்துக்கரணம் அடிக்கிறது. தமிழ் மாணவர்கள், இனி வரும் சந்ததியார்கள், இன்ன வார்த்தைக்கு இது தான் சரியான தமிழ் என்று கண்டுகொள்ள கஷ்டப்படுகிறார்கள்.

இப்படியான சந்தர்ப்பத்தில், இன்று கூடும் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டில் உலகின் பல் வேறு நாட்டு தமிழறிஞர்கள் ஒன்று சேருகிறார்கள் ஆகையினால் இந்த மொழிபெயர்ப்புப் பிரச்னைக்கு ஒருவழி[எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படும் ஒரு வழி] காணப்படும் என்று நம்பலாம்.

—வழிப்போக்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'திராவிடக் கழகத்துடன் எவ்வித தொடர்பும் கிடையாது'

## த. நா. கா. கமிட்டி தலைவர் சுப்பிரமணியம் அறிவிப்பு

சென்னை, ஜன. 2

ஒருவகுப்பினரைப்பற்றித் துவேஷப் பிரச்சாரம் செய்துகொண்டு, பலாத்கார முறைகளை ஆதரிக்கும் திராவிடக் கழகத்துடன் தமிழ்நாட்டுக் கழகத்துடன் எந்தவிதமான தொடர்பும் வைத்துக்கொள்ளாது என்று த. நா. காங்கிரஸ் கமிட்டியின் புதிய தலைவரான திரு. ஸி. சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு காங்கிரசுக்கும், திரு. ஈ. வே. ராவின் திராவிடக் கழகத்திற்கும் ஏதோ தொடர்பு இருப்பதாக ஓர் எண்ணம் இருந்து வருகிறதென்றும், அந்தத் தப்பெண்ணத்தைத் தாம் நீக்கவிரும்புவதாகவும்' திரு. சுப்பிரமணியம் கூறினார்.

திரு. ஈ. வே. ராவின் சில சமூக லட்சியங்கள் நாம் ஏற்றுக்கொள்ளக் கூடியவையாக இருக்கலாம் ஆனல், அதற்கு அவர் கூறும் வழிகள் காந்தீய வழிக்கு முற்றிலும் முரணானவை என்றார் அவர்.

## 'சிறை தரும் தேன் கவிதை'

சென்னை, ஜன 2

'கல்லும் சொல்லாதோ கவி' என்றார்கள். அதுபோல 'கடும் சிறையும் அளிக்காதோ கவிஞர்களை' என்று கூறலாம் போலிருக்கிறது.

சென்னை ராஜ்யச் சிறைகளில் தண்டனை அனுபவித்துவரும் 25 கைதிகள் இயற்றியுள்ள கவிதைகள் கொண்ட தொகுப்பு நூல் ஒன்றை ராஜ்ய அரசாங்கம் வெளியிட்டுள்ளது.

தமிழக சட்ட மந்திரி திரு. எஸ். மாதவனின் முன்னுரையுடன் கூடிய இந்நூல் சென்னையில் நடைபெறும் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் பங்குபற்றும் பிரதிநிதிகளுக்கு விநியோகிக்கப்படும்.

தமிழின் புகழையும், தமிழ்ப் பண்பாட்டின் புகழையும் பாடும் கவிதைகள் அடங்கிய இந்நூல் 'சிறை தரும் தேன் கவிதை' என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ளது.

# இன வெறிக்கெதிராக பாதுகாப்பு ஒப்பந்தம்

## ஸாம்பியா ஜனாதிபதி கவுண்டா யோசனை

லுஸாக்கா, ஜன. 2

கிழக்கு, மத்திய ஆபிரிக்க நாடுகள், இன வெறிக்கெதிராகத் தம்மிடையே ஒரு பாதுகாப்பு ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டுமென்று ஸாம்பியா ஜனாதிபதி டாக்டர் கென்னத் கவுண்டா கேட்டுக்கொண்டுள்ளார்.

ரொடீஷியா, போர்ச்சுக்கேய அங்கோலா, தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளில் சுமார் 3 கோடி மக்களுக்கெதிராக இன வெறிக்கொள்கை கடைப்பிடிக்கப்பட்டு வருவதுபற்றி ஸாம்பியா ஜனாதிபதி குறிப்பிட்டு, இந்த இனவெறிக் கொள்கையை எதிர்ப்பதற்கெனக் கிழக்கு, மத்திய ஆபிரிக்க நாடுகள் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றை உருவாக்கவேண்டியது அவசியமென வலியுறுத்தினார்.

## ரம்ழான் ஜனநெரிசலில் 6 பெண்கள் மரணம்

மதுரை, ஜன 2

முஸ்லிம் ஒருவரின் இல்லத்தில் ஏற்பட்ட ஜனநெரிசலில் 6 பெண்கள் உயிரிழந்தனர். ராமநாதபுரத்திலிருந்து 14 மைல் தொலைவிலுள்ள கீழக்கரையில் இப்பரிதாப சம்பவம் நிகழ்ந்தது.

ஆண்களும், பெண்களுமாகச் சுமார் ஆயிரம் பேர் ரம்ழானையொட்டித் தர்மம் பெறுவதற்காக முஸ்லிம் வீட்டுக்கு வெளியே காத்திருந்தனர். இதை அறியாத ஒரு சிறுவன் மசூதிக்குச் செல்வதற்காகக் கதவைத் திறந்தான். காத்திருந்தவர்கள் உள்பக்கமாக விரைந்தனர். வீட்டின் வாயில் மிகக் குறுகலாக இருந்ததால் நெரிசல் ஏற்பட்டது. இதில் 6 பெண்கள் உயிரிழந்தனர். மற்றும் 2பேர் காயமடைந்தனர்.

இச்சம்பவம் குறித்துகீழக்கரைப் பொலிசார் விசாரித்து வருகின்றனர்.

மேற்கத்தைய நாடுகள்

## தமது இறக்குமதித்தீர்வைகளை குறைத்துக் கொண்டுள்ளன

வாஷிங்டன், ஜன. 2

அமெரிக்காவும் வேறு சில மேற்கத்தைய நாடுகளும் தமது செய்பொருள், விளைபொருள்களின் இறக்குமதித்தீர்வைகளைக் குறைத்துக்கொண்டுள்ளன.

அமெரிக்கா, கனடா, நியூஸிலாந்து, ஆஸ்திரேலியா உட்படச்சில மேற்கத்தைய நாடுகள், கடந்த ஜூன் மாதம் நடத்திய கென்னடி சுற்றுப்பேச்சுக்களில், ஐந்துவருடங்களுக்கு தமது இறக்குமதித்தீர்வைகளைப் பரஸ்பரம் குறைத்துக்கொள்வதென முடிவு செய்திருந்தன.

இம்முடிவுக்கிணங்க, முதல் வருடமாக இப்போது அந்நாடுகள் தமது பொருள்களின் இறக்குமதித் தீர்வைகளைக் குறைத்துள்ளன.

## 'வட வியட்னும் ஆலோசனையை அமெரிக்கா பரிசீலனை செய்கிறது'

### ஜோன்சன் கூறுகிறார்

டெக்ஸாஸ், ஜன. 2

வட வியட்னும் மீது எவ்வித நிபந்தனையுமின்றி அமெரிக்கா குண்டுவீச்சை நிறுத்தினல், வியட்னுப் சமாதானப்பேச்சுவார்த்தைகளில் ஈடுபட வடவியட்னும் தெரிவித்திருக்கும் விருப்பப் பற்றி அமெரிக்கா பரிசீலனை செய்துவருவதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோன்சன் கூறியுள்ளார்.

டெக்ஸாஸிலுள்ள தமது கிராமப்புற வாசஸ்தலத்தில், பத்திரிகை நிருபர்களிடம் பேசுகையில் ஜோன்சன் இவ்வாறு தெரிவித்தார்.



## அரசாங்கத்துக்கெதிராக பாகிஸ்தானில் சதி

### அயூப் கான் எச்சரிக்கை

ராவல்பிண்டி, ஜன. 2

பாகிஸ்தானில், அரசாங்கத்துக்கெதிரான சதியில் அண்மையில் ஈடுபட்டதாகச் சிலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பாகிஸ்தான் ஜனாதிபதி அயூப்கான் நேற்றுரேடியோ செய்தியொன்றில், நாட்டின் ஐக்கியத்தைக் குழப்பும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் சக்திகளையிட்டு எச்சரிக்கையாக இருக்கும்படி மக்களைக்கேட்டுக்கொண்டார்.



## 'ஸ்கொலர்ஷிப்' கதைகூறி பெண்ணைஏமாற்றிய இளைஞன்

திருச்சி, ஜன. 2

ஒருபெண்ணை ஏமாற்றி அவளுடைய நகைகளைப் பறித்துச்சென்ற இளைஞரைத் திருச்சியில் பொலிஸார் தேடிவருகின்றனர்.

பொன்மலை அருகே ஆலத்தூர் கிராமத்தில் பிச்சையென்கின்ற இளைஞன் ஒருவன் ஒருபெண்ணை அணுகி பள்ளியில் படிக்கும் அவளது புதல்விக்கு 'ஸ்கொலர்ஷிப்' கிடைத்துள்ளது என்றும் தன்னுடன் வந்தால் ஸ்கொலர்ஷிப் பணத்தை அதிகாரியிடமிருந்து வாங்கித் தருவதாகவும் கூறினனும்.

அப்பெண்ணும் நம்பி அவனுடன் சென்றாள். வழியில் ஒரு இடத்தில் இவ்வளவு நகைகளையும் போட்டுக்கொண்டு அதிகாரியிடம் சென்றால் பணக்காரப்பெண் என அவர் கருதி ஸ்கொலர்ஷிப்பை மறுத்து விடுவார் என்று அவளிடம் அந்த இளைஞன் சொன்னனும். நகைகளைக் கழற்றிக் கொடுங்கள் பத்திரமாக வைத்துக்கொள்கிறேன் அதிகாரியைப்பார்த்துவிட்டு வந்தவுடன் திருப்பிக் கொடுத்துவிடுகிறேன் என்று அவன் சொல்லவே அவள் நகைகளைக் கழற்றி அவனிடம் கொடுத்தாள்.

இருங்கள் அதிகாரி இருக்கிருரோ எனப் பார்த்துவிட்டு வருகிறேன் என்று சொல்லிவிட்டுப் போன இளைஞன் திரும்பவில்லை பல மணிநேரம் அங்கேயே காத்திருந்து அந்தப் பேதைப் பெண்ணுக்குத் தான் ஏமாற்றப்பட்டது பிறகுதான் தெரியவந்தது.

## ஏமனில் சண்டை

சானு, ஜன 2

புதிய ஏமன் குடியரசின் தலைநகரான சானுவில் முடியரசுவாதித் துருப்புகள், அரசாங்கத் துருப்புகளுடன் மோதுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தச் சண்டையில் சிவிலியன் பக்கத்தில் கடும் சேதம் விளைவிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழக-கேரள முதல் மந்திரிகள்

### ஆற்று நீர் பற்றிப் பேசினர்

சென்னை, ஜன. 2

தமிழக முதல்மந்திரி திரு. ஸி. என். அண்ணுதுரையும், கேரள முதல்மந்திரி திரு. ஈ. எம். எஸ். நம்பூதிரிபாதும் இரு ராஜ்யங்களிடையேயான ஆற்றுநீர் பங்கீடு பற்றியும், குறிப்பாக பரம்பிக்குளம்-அலியார் திட்டத்தையிட்டும் பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளனர் இப்பேச்சுவார்த்தைகள் சென்னையில் நடைபெற்றன.

மீண்டும் பெப்ரவரி மாதம் 17ம் 18ம் திகதிகளில், இரு முதல்மந்திரிகளும் கொச்சினில் சந்தித்துப் பேசவிருப்பதாகவும், அப்போது ஓர் இறுதியான முடிவு எடுக்கப்படுமென்றும் திரு. அண்ணுதுரை தெரிவித்தார்.

சென்னையில் நடைபெற்ற முதல்மந்திரிகள் பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றிய மத்திய நீர்ப்பாசன, மின்சக்தி மந்திரி டாக்டர் கே. எல். ராவ், கொச்சின் பேச்சு வார்த்தைகளிலும் கலந்துகொள்வார்.

## ஆசிரியரின் பைல் எங்கே தொலைந்தது?

சங்கானை, செவ்வாய்

சங்கானையைச் சேர்ந்த திரு. குணபாலசிங்கம் என்ற ஆசிரியரும் இவரது மனைவியாரும் (ஆசிரியை) ரக்குவானை கொறமுல்லைத்தோட்டத்திலிருந்து டெனியாவிலுள்ள வேறொரு தோட்டத்துக்கு மாற்றம் செய்யப்பட்டனர். திரு. குணபாலசிங்கத்தின் தராதரப்பத்திரங்கள், நற்சாட்சிப்பத்திரங்கள் ஆகியவையும் அவரது மனைவியின் தராதரப் பத்திரங்கள் நற்சாட்சிப்பத்திரங்கள் ஆகியனவும் மாத்தறை வித்தியாதிபதி கந்தோருக்கு அனுப்பப்பட்டனவாம். ஆனல் திரு குணபாலசிங்கத்தின்பத்திரங்கள் எவையும் தமக்குக் கிடைக்கவில்லையென கல்விக் கந்தோர் தோட்ட நிர்வாகத்துக்கு தெரிவித்திருந்ததாம்.

இதனுல் கவலையடைந்த திரு. குணபாலசிங்கம் குறிப்பிட்ட கந்தோருக்கு நேரில் சென்று பார்த்தபோது அங்கு தமது பத்திரங்கள் கிடைத்ததற்கான குறிப்புகள் இருக்கக் கண்டாராம். இதுபற்றி மேலும் விசாரித்ததில் தாம் கடமையாற்றிய தோட்டத்தைச் சேர்ந்த பைலே தொலைந்துவிட்டதாகவும் தெரியவந்ததாம்.

இதுசம்பந்தமாகதோட்ட நிர்வாகம் தற்பொழுது மேலதிகாரிகளுடன்தொடர்புகொண்டுள்ளதாகத் தெரிகிறது.

சீனுவில்

## பெரும் உள்நாட்டுப் போர் ஏற்படும் அபாயம்

ஷாங்காய். ஜன. 2

சீனுவில், பெரும் உள்நாட்டுப்போர் ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளதாக ஷாங்காய் ரேடியோ அறிவித்துள்ளது.

புரட்சிக்கருத்துக்களை எதிர்ப்பவர்களையும், கம்யூனிஸ திரிபுவாதியான சீன அதிபர் லியூ ஷாஷியின் ஆதரவாளர்களையும் இரக்கமின்றி ஒழித்துக்கட்டவேண்டுமென்று ஷாங்காய் ரேடியோவும் பத்திரிகைகளும் கேட்டுக்கொண்டுள்ளன.

அப்படிச் செய்யாவிட்டால் நாட்டில்குழப்பமும்போரும் அதிகரிக்கும் என அவை எச்சரித்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திச் சுருக்கம்

### சோஷலிஷ முன்னணி

நாத்தாண்டியாத் தொகுதியிலுள்ள கொட்டாரமுல்லையில் இஸ்லாமிய சோஷலிஸ்ட் முன்னணிக்கிளையொன்று நிறுவப்பட்டதும் தலைவராக ஜனுப் எம். பீ. எஸ் தாலூத்தும் உப தலைவராக ஜனுப ஐ எல். எம்? தாஸீம் ஜனுப் எம். அபூதாகூர் ஆகியோரும், காரியதரிசியாக சப்தினும் தெரிவு செய்யப்பட்டனர்.

### இறைச்சி தட்டுப்பாடு

மன்னாரில் நிலவும் இறைச்சித் தட்டுப்பாடு காரணமாக வரியிறுப்பாளர்களுக்கு வேண்டிய இறைச்சி வாரம் ஒருமுறைதானும் கிடைப்பதில்லையென்றும் புகார் கூறப்படுகிறது. பத்தாயிரத்துக்கும் அதிகமான மக்கள் வாழும் மன்னார்ப் பட்டினத்தில் பல கசாப்புக் கடைகள் இருந்த போதிலும் ஒரே ஒரு கடையில் மட்டும்தான் இறைச்சி விற்பனை செய்யப்படுகின்றதாம்.

### தீப்பெட்டியில் கொள்ளை லாபம்

தீப்பெட்டியில் கொள்ளை லாபமடித்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்ட அனுரதபுரத்திலுள்ள ஹோட்டல் உரிமையாளர் ஒருவருக்கு அனுராதபுரம் நீதவான் திரு. ஆ. தீரரத்தின மூன்றுவாரக் கடுங்காவல் தண்டனையும் 250 ரூபா அபராதமும் விதித்தார். இவ்வளக்கில் தீப்பெட்டியொன்றின் கட்டுப்பாட்டு விலை 5 சதமாக இருக்கையில் அதை 12 சதமாக விற்றதாக குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

### மீன்வளர்ப்பு பண்ணை

மட்டுநகர் வாவியில் இறால், நண்டு: மீன் வளர்ப்புப் பண்ணைகள் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன இதுபோன்ற பண்ணைகள் நீர்கொழும்பு, மன்னார் ஆகிய இடங்களில் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பு வாவியில் 250 ஏக்கர் விஸ்தீரணமுள்ள பகுதி இந்த மீன் வளர்ப்புப் பண்ணைக்காகப் பயன்படுத்தப் படுமாம்.

### 20-ம் ஆண்டு நிறைவு விழா

பர்மா சுதந்திரமடைந்த இருபதாம் ஆண்டு நிறைவு விழாவையொட்டி இலங்கையிலுள்ள பர்மாவின் தற்காலிக ஸ்தானிகர் திரு. டெட்ஸாவின் இல்லத்தில் இம்மாதம் 4-ம் திகதி கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

### 130 பேர் காயமடைந்தனர்

புதுவருட கொண்டாட்டத்தில் வெடி கொளுத்தியவர்களில் 130 பேர் காயமடைந்து கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 26 பேர் படுகாயமடைந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

### பால்மா உற்பத்தி

வருடத்திற்கு 250 லட்சம் இருத்தல் பால்மாவை இலங்கையிலேயே உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலையொன்று மலைநாட்டுப் பகுதியில் நிறுவப்பட இருக்கிறது. குண்டசாலையை அடுத்துள்ளபகுதி ஒன்று இதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இந்த வருடத்தில் இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் நடைபெறும்.

### மருந்து தட்டுப்பாடு

மடுல்சீம மாவட்டத்தில் உள்ள மெட்டிகாதென அரசாங்க வைத்தியசாலையில், சமீபகாலமாக போதிய மருந்துகள் இல்லாமல், நோயாளிகள் பெரிதும் அவதிப்படுகின்றனர். மருந்து கொடுக்கும் சிப்பந்திகள் அடிக்கடி லீவில் போவதால் மருந்து பறுவதற்குநோயாளிகள் திண்டாடுகின்றனர்.

# 10 ஆண்டுகள்

*1968 பெப்ரவரி மாதம் 11-ந் திகதி 'ஈழநாடு' பத்திரிகைக்கு பத்து வயது தொடங்குகிறது.*

யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு பத்திரிகை அதுவும் தினசரிப்பத்திரிகை பத்து ஆண்டுகள் தொடர்ச்சியாக வெளிவருவதென்பது சாதாரண விஷயமல்ல. மகத்தான சாதனையென்று சொல்லலாம்.

'ஈழநாடு' பத்தாவது வயதில் காலடி எடுத்து வைக்கிறது என்ற செய்தி நமது வாசக நேயர்களுக்கு மட்டுமல்ல இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்கள் அனைவருக்கும் அக மகிழ்வை அளிக்கும்.

கடந்த ஒன்பது ஆண்டுகளில் 'ஈழநாடு' ஆற்றியுள்ள பணிகள் பல. தமிழ்பேசும் மக்களின் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் பெற்றிருக்கிறது.

நமது சேவையைப்பற்றி நாமே எடுத்துச் சொல்லுவது நல்லதல்ல. இந்தப்பொறுப்பை வாசகநேயர்களாகிய உங்களிடமே ஒப்படைக்கிறோம்; நீங்களும் இதை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்வீர்களென்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு.

'ஈழநாடு' கடந்த காலத்தில் ஆற்றிய பணிகள் பற்றியும் அது இனி என்ன செய்ய வேண்டுமென்பது பற்றியும் உங்கள் கருத்தை எழுதுங்கள்.

விரைவில் நாங்கள் வெளியிடவிருக்கும் 'ஈநாழடு' பத்தாவதாண்டு மலரில் உங்கள் கருத்தும் இடம்பெறும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

எனவே 'ஈழநாடு' பற்றிஉங்கள் கருத்தை உள்ளம் திறந்து எழுதுங்கள்; உடனே எழுதுங்கள்.

த. பெ. என் 49, யாழ்ப்பாணம்.

ஆசிரியர், ஈழநாடு.

துப்பாக்கி லைசென்ஸ்

## மூன்று மாத அவகாசம்

கொழும்பு, செவ்.

துப்பாக்கிகளுக்கு லைசென்ஸ்எடுக்காதிருப்போருக்கு உள்நாட்டு விவகார அமைச்சர் டாக்டர் டபிள்யு. தஹநாயக்கா விடுத்துள்ள அறிவித்தலொன்றில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

லைசென்ஸ் இல்லாதிருக்கும் துப்பாக்கிகள் யாவற்றிற்கும் பிறப்பிக்கப்பட்ட மூன்று மாத காலத்திற்குள் தமக்குச் சமீபமாக உள்ள பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரியிடம் ஒப்படைத்துவிடல்வேண்டும். இக்கட்டளை 22-12-68ந் திகதியிட்ட அரசங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. எனவே லைசென்ஸ் இல்லாத துப்பாக்கிகளை ஒப்படைக்கும் கடைசித் திகதி 1968ம ஆண்டு மார்ச் மாதம் 21ந் திகதியாகும்.

உணவு உற்பத்திப் பெருக்கத்திற்குத் துப்பாக்கிகள் தேவைப்படுவோருக்கு லைசென்ஸ் வழங்கப்படும் ஏனையோரின் கோரிக்கைகள் கண்ணியத்துடன் கவனிக்கப்படும். துப்பாக்கி ஒப்படைக்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாத காலத்திற்குள் குறித்த துப்பாக்கிக்குரிய லைசென்ஸ் தாக்கலாகினல் அத்துப்பாக்கி அதன் உரிமையாளருக்குத் திருப்பிக் கொடுக்கப்படும்.

எவராவது ஒருவர் இக்கட்டளையின் பிரகாரம் எந்தத் துப்பாக்கியையும் ஒப்படைத்தால் அவர் 22ம் பிரிவின் பிரகாரம் அத்துப்பாக்கியை ஒப்படைத்த திகதிக்கு முன் தன்வசமோ தம் பொறுப்பிலோ வைத்திருந்த குற்றத்திற்காக எதுவித தண்டனைக்கும் உள்ளாகமாட்டார்.

## உடுப்பிட்டி அ. மி. பாடசாலை இரு பிரிவுகளாகும்

இமையாணன், செவ்.

பாலர் வகுப்பு தொடக்கம் உயர்தர வகுப்பு வரை உள்ள பாடசாலைகளை "கீழ்ப்பிரிவுப் பாடசாலை", "உயர்தரப் பாடசாலை" என இரண்டாகப் பிரிக்கப்படும் திட்டத்தின்கீழ், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியும் இரண்டாகப் பிரிக்கப்படவிருக்கிறது. முதலாம் வகுப்பு முதல் ஏழாம் வகுப்பு வரை உள்ள கீழ்ப்பிரிவுப் பாடசாலைக்கு எஸ். எஸ். கணபதிப்பிள்ளை அதிபராகவும், ரி. தம்பிராசாவும், கே. ஆறுமுகமும் உதவியாளர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். எட்டாம் வகுப்பு முதல் எச். எஸ் ஸி. வகுப்பு வரை உள்ள உயர்தரப் பாடசாலைக்கு எஸ். எஸ் செல்வத்துரை அதிபராகவும், ஜெ பேட் நவரத்தினம் உதவி அதிபராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். ஆங்கிலம், தமிழ், சமயம் போன்ற பாடங்களுக்கு ச. விநாயகமூர்த்தியும், கணக்கு, விஞ்ஞானம் போன்ற பாடங்களுக்கு ஏபிரகாமும், வர்த்தகம், கைத்தொழில் போன்ற பாடங்களுக்கு சி. ஆனந்தராசாவும், சமூகக்கலை போன்ற பாடங்களுக்கு எஸ். எம். வேலுப்பிள்ளையும் பகுதிப் பொறுப்பதிகாரிகளாக நியமிக்கப் பட்டுள்ளனர்.

## கல்முனையில் மலேரியா

கல்முனை, திங்கள்

கல்முனைப்பகுதியில் உள்ள நற்பிட்டிமுனை, பாண்டிருப்பு ஆகிய பகுதிகளில் மலேரியா நோய் பரவியுள்ள [illegible] பகுதியினர் [illegible] தடுப்புவேலைகளில் மும்முரமாக ஈடுபட்டுவருகின்றனர். தடுப்புமருந்து தெளிப்பதிலும், மலேரியாக் காய்ச்சலுடைய வர்களை சோதனை செய்வதிலும், சுகாதாரப் பகுதியினர் சிரத்தை எடுத்துள்ளனர்.

தேர்தல் பிரசாரத்துக்கு

# சுந்தரலிங்கம் கல்முனை செல்கிறார்

கல்முனை, புதன்

கல்முனைத்தொகுதிஇடைத் தேர்தலில் ஈழத்தமிழர் விடுதலை இயக்கத்தின் சார்பில் போட்டியிடும் முன்னாள் செனட்டர் திரு எம். மாணிக்கத்தை ஆதரித்துப் பிரசாரம் செய்ய முன்னாள் வவனியா எம். பீ யும், விடுதலை இயக்க தலைவருமான திரு. சி. சுந்தரலிங்கம், இம்மாதம் 10-ம் திகதி கல்முனைக்குச் செல்லவிருக்கின்றார்.

திரு சுந்தரலிங்கமும், அவருடன் செல்லும்கோஷ்டியும் சுமார் ஒரு மாதகாலம் கல்முனைத்தொகுயில் பிரசாரம் செய்வதோடு தேர்தல் கூட்டங்களிலும் சொற்பொழிவாற்றுவார்கள்.

திரு. எம். மாணிக்கம், தற்பொழுது கல்முனை தொகுதியில் ஆதரவு திரட்டுவதில் மும்முரமாக இறங்கியுள்ளார். விடுதலை இயக்கத்தின் கொள்கைகளை மக்களுக்கு விளக்குவதற்காகவே கல்முனை இடைத்தேர்தலில் போட்டியிடுவதாக திரு மாணிக்கம் தெரிவித்தார்.

முன்னாள் நீதிபதி திரு. எஸ். என். இராசதுரையும், திரு. மாணிக்கத்திற்கு ஆதரவாக கல்முனை தொகுதியில் பிரசாரம் செய்வாரெனத் தெரிய வருகிறது.

## நோய்பரவுகிறது

நயினாதீவு, செவ்.

சமீபத்திலேற்பட்ட வெள்ளப்பெருக்கின் பின்னர் இங்கு குழந்தைகளுக்கு வாந்தி, வயிற்றோட்டம் போன்ற வியாதி பரவிவருவதாகத் தெரிகிறது. இதனால் பல பிள்ளைகள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

இதனைத் தொடர்ந்து தமது பிள்ளைகளை சுகாதாரமான சூழ்நிலையில் வளர்க்கும்படியும் மிகவும் அவதானமாகப் பார்த்துக் கொள்ளும்படியும், நோய் கண்டதும் ஆஸ்பத்திரியில் உடனடியாகச் சேர்ப்பிக்கும்படியும் கிராமசபைத் தலைவர் திரு. சி. க. தம்பையா பொதுமக்களுக்கு அறிவித்தல் செய்துள்ளார்.

## நடவடிக்கை எடுக்கவும்

யாழ்ப்பாணம், புதன்

சங்கானையிலுள்ள தேநீர்க் கடைகளில் சமூக ஏற்றத் தாழ்வுகளை ஒழிக்க நடவடிக்கை எடுக்குமாறு சங்கானை சமாதானக் கமிட்டியைச் சேர்ந்த 8 பேர்கள் கையெழுத்திட்டு வடபகுதி பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கத்திற்கு ஒரு மகஜர் அனுப்பியுள்ளனர்.

சமாதானக் கமிட்டி அமைக்கப்பட்டு பல நாட்களாகியும் சமாதானம் ஏற்படுவதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லையென்றும், தேநீர்க்கடைப் பிரவேசத்தின் மூலமே நிரந்தர சமாதானம் நிலவச் செய்யலாமென்று அந்த மகஜரில் கூறப்பட்டுள்ளது.

சமாதானக்கமிட்டி விரைவில் எடுக்கவிருக்கும் நடவடிக்கைகளுக்குப் பொலிஸாரின் ஆதரவைத் தரும்படியும் கோரப்பட்டுள்ளது.

## மாணவ ஆசிரியர் பரீட்சை

அளவெட்டி, செவ்.

தமிழ்-சிங்கள பாடசாலைகளில் சேவையாற்ற நாடு பூராவிலும் உள்ள தமிழ்-சிங்கள மாணவர்களைத் தெரிந்தெடுப்பதற்காக அரசாங்கம் பரீட்சை ஒன்று நடத்த இருக்கிறது.

இப்பரீட்சை இவ்வருடம் ஏப்ரல் மாதம் 24, 25ம் திகதிகளில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

மாணவ ஆசிரியர்களைத் தெரிவுசெய்யும இப்பரீட்சையில் பங்குகொள்ள விரும்பும் மாணவர்கள். இம்மாதம் 20-ம் திகதிக்கு முன் விண்ணப்பங்களை பரீட்சை அதிகாரிக்கு அனுப்பவேண்டும்.

பரீட்சார்த்திகள்சிரேஷ்ட பாடசாலை தராதரப்பத்திரம் பெற்றவர்களாக இருத்தல் வேண்டும். அல்லது தமிழ்சிங்களப்பாஷை எண்கணிதம், வர்த்தக எண் கணிதம், ஆரம்பகணித தூயகணிதம் என்பவற்றிலும் வேறு நான்கு பாடங்களிலும் இரண்டுக்கு மேற்படாத தடவைகளில் சித்தியடைந்த கனிஷ்டபொதுத் தராதரப் பத்திரம் (சாதாரணம்) பெற்றவர்களாகவும், பரீட்சார்த்திகள் விண்ணப்பிக்கும் கடைசித்திகதியன்று 18 வயதுக்குக்குறையாமலும் 32 வயதுக்குமேற்படாமலும் இருத்தல் வேண்டுமெனவும் இலங்கைப்பிரஜையாக இருக்க வேண்டுமெனவும் 1967-ம் ஆண்டு டிசம்பர் 22-ம்திகதி வெளியிட்ட அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

## பிரதமரின் நம்பிக்கை

கொழும்பு, செவ்.

"கடந்த அரசாங்கத்தாலேயே நாட்டின் பொருளாதாரம் சீர்குலைக்கப்பட்டது. இப்போதிருக்கும் பிரச்னைகளுக்குக் கூட்டரசாங்கமே காரணம். எவ்வளவோபிரச்னைகளைத் தீர்த்துவிட்டோம். மிகக் குறுகிய காலத்தில் இப்போதுள்ள பிரச்னைகளையும் தீர்த்துவிடுவோம்."

திரு. டட்லி சேனநாயகா நாத்தாண்டியாதொகுதியில் யூ. என். பி. அபேட்சகர் திரு. கியூ. பெர்னாண்டோவை ஆதரித்துப் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: நாட்டின் வேலையில்லாத்திண்டாட்டத்தைத் தீர்ப்பதற்கு சுதந்திரக்கட்சி என்ன செய்தது? பதவி ஆசைபிடித்தவர்களும் ஒன்றுமற்றவர்களும் தேசிய அரசாங்கத்தைக் கவிழ்க்க முயல்கின்றனர். இலவச அரிசித்திட்டத்தை தேசிய அரசாங்கமே அமுலுக்குக் கொண்டுவந்தது. நாட்டின் இன்றைய நிலையில் வேறு அரசாங்கமாக இருந்தால் இவ்வாறு செய்திராது. இலவச அரிசி முறையையே எடுத்திருக்கும்.

நிதிமந்திரி திரு. யு பி. வன்னிநாயக்கா, மீன்பிடி மந்திரி பிலிப் குணவர்த்தன ஆகியோரும் பேசினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

**மேற்பார்வையாளர்**

விவசாயத்தில் விசேடமாய் நெற்செய்கையில் அனுபவம் மிக்க இருவர் தேவை. விவசாயம் செய்யும் காட்டுப் பகுதிகளில் வசிக்கக்கூடியவர்களாய் இருத்தல்வேண்டும். தராதரங்களுடன் விண்ணப்பிக்கவும். சம்பளம் மற்றும் விபரங்கள் நேரில். கு. வி. தம்பித்துரை J. P., கலைவாணி, 10, மெயின் வீதி, யாழ்ப்பாணம். 2028

**ஆசிரியை**

தையல்கற்பிக்கத் தராதரமுள்ள ஆசிரியை உடன் தேவை. விண்ணப்பிக்கவும். கலா தையல் பயிற்சிச்சாலை, 330, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 2035

மன்னார் மாவட்டத்தில் நூறுஏக்கர் முந்திரிகைக் கமத்தில் வேலை பழகியபின் கமத்தின் மேற்பார்வைப் பொறுப்பை ஏற்கக்கூடிய தகுதியும் கமத்தொழில் ஊக்கமும் கடினமான வேலை செய்யக்கூடிய தேகநிலைமையும் உள்ளவர்கள் தேவை. முதல் ஆறுமாதமும் உணவும் இருப்பிட வசதியும் அதன்பின் வேலைக்கேற்ற சம்பளமும் வழங்கப்படும். விண்ணப்பிக்கவும். செயலாளர், சமூக பொருளாதார அபிவிருத்திச்சங்கம், இல. 5, W. A. சில்வா மாவத்தை, கொழும்பு-6. 2596

### கல்வி

3—5 வயதுவரையுள்ள சிறுவர்கள், மொன்ரிசோறி முறையாகவும், தற்போதைய புதியமுறைகளை அனுசரித்தும் கல்வி கற்பிக்கப்படும். இன்னும் சில மாணவர் சேர இடமுண்டு. விபரங்களுக்கு: அன்பு பாலர் பாடசாலை [சீதாசோடாக்கம்பனியருகே] 330, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 2034

### விற்பனைக்கு

**பித்தளை**

புதிய - பழைய பித்தளைச் சாமான்கள் கூடுதலாக விற்பனைக்குண்டு. நேரில் வந்து பார்த்து, வாங்கும் விலையை எழுத்துமூலம் காரியதரிசிக்கு அறிவிக்கவும். கூடுதலான விலையைக் குறிப்பவர்களுக்கே சாமான்கள் விற்கப்படும். கா. ஆறுமுகம், தர்மபரிபாலனசபைக் காரியதரிசி, ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு. 2029

**கார்**

2 ஸ்ரீ இலக்கத் தொடர் போர்ட் கொன்சல் கார். திறம் நிலையில். பார்வைக்கு: டிறேட் & டிரான்ஸ்போர்ட் கொம்பனி, யாழ்ப்பாணம். 2026

### கல்வி

**ரியூசன்**

எட்டாம்வகுப்புக்குக் கீழ்ப்பட்ட மாணவர்களுக்கு மாலையில் வீட்டில் வந்து பாடம் சொல்லித்தரப்படும் விபரங்களுக்கு: S. சின்னராசா, 75, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 2033

**நியூ காலிங்கன்**
[இணுவில்]
தினசரி 6-30, 10-00 மணி
விடுமுறைதினங்களில் 2-30
எம். ஜி. ஆர். - ஜெமினி
நடித்த
**முகராசி**

**MANOHARA**
JAFFNA
1 st to 3 rd
Daily 4 Shows
Jerry Lewis
in
**DISORDERLY ORDERLY**
Also Showing
1967 F. A. CUP FINAL

## 2-வது வெற்றிவாரம்

கிங்ஸ்லி [கொட்டாஞ்சேனை]
பிளாஸா [கொழும்பு]
வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
விஜயா [மட்டுநகர்]
ஸ்ரீகிருஷ்ணா [திருமலை]
மொடேர்ன் [பதுளை]
விஜிதா [ஹட்டன்]



சுந்தரராஜன்
ஏ.வி.எம் ராஜன்
முத்துராமன்



ஜெயலலிதா
நாகேஷ்
மற்றும்
பலர்
நடிக்கும்
**மேஜர் சந்திரகாந்த்**

# வறுமையின் காரணமாக சுருக்கிட்டு தற்கொலை

யாழ்ப்பாணம், புதன்

வறுமையின் கோரப்பிடியில் சிக்கித்தவித்த ஒரு தாய் தனது கைக்குழந்தையை பக்கத்து வீட்டில் ஒப்படைத்துவிட்டு பட்டப் பகலில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்ட ஒரு சம்பவம் நேற்று முன்தினம் நல்லூரில் நடந்தது.

நல்லூர் கிழக்கைச் சேர்ந்த கந்தையா அப்புத்துரை நல்லம்மாவின் [வயது 30] மரண விசாரணையின் போது மேற்கண்ட விபரம் தெரியவந்தது. மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். இராசநாயகம் மரணவிசாரணை நடத்தினார்.

இறந்தவரின் குடும்பம் ஒரு வறிய குடும்பமென்றும் கணவன் காலையில் வேலைக்குச் சென்று மாலையில்தான் திரும்புவாரென்றும், அன்றையதினம் கணவன் மூன்று பிள்ளைகளைக்கொண்டு சென்றாரெனவும் கைக்குழந்தை மட்டும்தான் இறந்தவரிடம் இருந்ததாகவும் மரணவிசாரணையின் போது கூறப்பட்டது.

வீட்டுக்கதவு பூட்டியிருந்ததால் இறந்தவரின் மாமியாரும், அயலவர்களும் வந்து கதவை உடைத்து திறந்தபோது இறந்தவர் தூங்கிக் கொண்டிருந்தாரென்றும் கூறப்பட்டது. விசாரணையின் பின் தற்கொலையெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

# நத்தார்கொண்டாட வந்தவர் கடலில்மூழ்கி மரணம்

யாழ்ப்பாணம், புதன்

மாமனார் வீட்டில் நத்தார் பண்டிகையைக் கொண்டாட வந்தவாலிபர், கடலில் மூழ்கி மரணமான சம்பவம் ஒன்று யாழ்ப்பாணத்தில் நடந்துள்ளது.

மயிலிட்டியைச் சேர்ந்த 15 வயதான வேலுப்பிள்ளை விஸ்வராசாவின் மரண விசாரணையின்போது மேற்கண்ட விபரம் தெரியவந்தது. மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். இராசநாயகம் மரண விசாரணை நடத்தினார்.

மரணமான வாலிபர் பாஷையூரிலுள்ள தனது மாமனார் பொன்னுத்துரையின் வீட்டிற்கு வந்தாரென்றும் பொன்னுத்துரையும்சிலரும் கடலில் மீன்பிடிக்கச் சென்றபோது தானும் வருவதாகக்கூறி இவ்வாலிபரும் சென்றாரென்றும் மற்றவர்கள் கடலில் இறங்கி மீன் பிடிக்கச்சென்றபோது, இவ்வாலியர் வள்ளத்திலிருந்து கடலில் வீழ்ந்து மூழ்கினாரென்றும், விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

தண்ணீரில் மூழ்கிய வாலிபரை தூக்கிப்பார்த்தபோது அவர் பேச்சுமூச்சின்றிக் கிடந்தாரென்றும், மேலும் தெரிவிக்கப்பட்டது. விபத்தினால் ஏற்பட்ட மரணம் எனத்தீர்ப்பளிக்கப்பட்டது.

கிரிக்கெட் டெஸ்ட்

# இரண்டாவது இன்னிங்ஸில் இந்தியா: 3விக்கெட்டுக்கு 190

மெல்போர்ண், ஜன. 3

நேற்று நடைபெற்ற இந்திய-ஆஸ்திரேலியஇரண்டாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியின் மூன்றாவது நாள் விளையாட்டில், ஆஸ்திரேலியா, தனது முதல் இன்னிங்ஸில் மொத்தம் 529 ஓட்டங்களை எடுத்துக் கொண்டது.

நேற்றைய விளையாட்டின் போது, ஆஸ்திரேலிய துருப்பு வீரரான அயன் சப்பெல், 151 ஓட்டங்கள் பெற்று ஆட்டமிழந்தார். ஆஸ்திரேலியாவின் முதலாவது இன்னிங்ஸில், சதம் எடுத்தவர்களில் இவர் மூன்றாவது வீரராவர். முன்னதாக, ஆஸ்திரேலிய காப்டன் ஸிம்ப்ஸனும், லோரியும் சதம் எடுத்திருந்தார்கள்.

இந்தியாவுக்காகப் பந்து வீசிய வீரர்களில் பிரஸன்னா சிறந்துவிளங்கினார். அவர் 143 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 6 விக்கட்டுகள் எடுத்திருந்தார்.

இந்தியா, தனது இரண்டாவது இன்னிங்ஸில் முதலாவது இன்னிங்ஸைவிட நன்றாக ஆடியது. முதல் இன்னிங்ஸில் மொத்தம் 173 ஓட்டங்கள் எடுத்திருந்த இந்தியா, நேற்று 2 விக்கெட் நஷ்டத்துக்கே இந்தத்தொகையைத் தாண்டியிருந்தது.

இறுதியாகக் கிடைத்த செய்திகளின்படி, இந்தியா 3 விக்கெட்டுகளை இழந்து 190 ஓட்டங்கள் பெற்றுள்ளது. வாதேக்கார், 97 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காதுள்ளார். அவருடன் பிரஸன்னா துடுப்பெடுத்தாடுகிறார். முன்னதாக, என்ஜினியரும் சூர்தியும் திறமையாக ஆடி முறையே 42, 47 ஓட்டங்கள் எடுத்திருந்தனர்.

**REGAL** JAFFNA
4-45, 7-00 & 9-45 p.m.
Tom Tryon
Romy Schneider
in
**THE CARDINAL**
[in Panavision]

## விளம்பரம்

### முக்கிய அறிவித்தல்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலுக்கு மீசு வரிக் காணிக்கை நெல் மற்றும் பொருட்களை வசூலிக்க ஒருவரையும் நியமிக்கவில்லையாதலால், யாரிடமும் கோவிலுக்கென ஒன்றும் கொடுக்கவேண்டாமென அறியத்தருகின்றோம்.

விரும்பிய அடியார் நேரில் கொண்டுவந்து கொடுத்து அம்பாளின் திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

கா. ஆறுமுகம்,
தர்மபரிபாலனசபைக்
காரியதரிசி.

ஸ்ரீ நாகபூஷணி
அம்மன்கோவில்
நயினாதீவு. 395

# தென் ஆபிரிக்காவுக்கு தேயிலை

திருக்கோணமலை, செவ்.

திருக்கோணமலைத் துறைமுகம் தேசியமயமாக்கப்பட்டு துறைமுக கூட்டு ஸ்தாபனம் ஏற்றுமதி வேலைகள் யாவற்றையும் கையேற்றபின் முதன்முதலாக இப்போது 'பேர் பாங்க்' என்னும் கப்பல் தென்ஆபிரிக்கத் துறைமுகங்களான டேர்பன், கேப்டவுண் ஆகிய துறைமுகங்களுக்குக் கொண்டு செல்வதற்குத் தேயிலை ஏற்றிக் கொண்டிருக்கிறது.

# அதிசய ஆட்டுக்குட்டி

சங்கானை, செவ்.

சண்டிலிப்பாய் சீரணியைச் சேர்ந்த வல்லிபுரம் இளையராசாவின் ஆடு ஒன்று நெற்றிக் கண்ணுடன் குட்டி ஒன்றை ஈன்றுள்ளது. இவ் அதிசயத்தைப் பார்ப்பதற்கு மக்கள் திரள்திரளாகச் சென்றனர். பிறந்த சில மணித்தியாலங்களில் குட்டி இறந்துவிட்டது.

**The Jaffna Academy & School of Technology**

Chundikuli, Phone No. 617 Jaffna.

Reopens on 10 th January 1968.
Admissions from 8 - 1 - 68

Courses-

1. G. C. E. Ordinary Level 1968.
2. University Entrance, G. C. E., (Advanced Level) December 1968 & 1969.
3. Survey Draughtsmanship & Elementary Surveying Surveyor General's Examination May 1969.
4. Civil Draughtsmanship & Building Construction-City & Guilds Examination May 1969
5. Electrical Engineering Practice - Preliminary, City & Guilds London Examination May 1969.
6. Electrical Engineering Practice - Intermediate, City & Guilds London Examination May 1969.
7. Electrical Engineering Practice - Final, City & Guilds London May 1969.
8. Courses in Civil, Electrical & Mechanical Engineering - The Institutions of Engineers, Ceylon
9. Special Practical Classes from January to April for the University Entrance 1967 students. Two practicals in each subject per week. Practicals provided in all science subjects.

Hostel accomodation available.
Apply on forms obtainable in this office.
Prospectus available in the office at -/50 cts.

DIRECTOR.

2-1-68

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். இந்துக்கல்லூரி பெற்ருேர் சங்கத்தின் கோரிக்கை

யாழ்ப்பாணம், புதன் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் 6-ம் வகுப்பை தொடர்ந்தும் நடத்தும்படி கல்வி அமைச்சரைக் கேட்டுக் கொள்ளுவதென சென்ற ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் நாவலர் மண்டபத்தில் நடைபெற்ற யாழ் இந்துக்கல்லூரியின் பெற்ருேர் சங்கக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

நூற்றுக்கணக்கானேர் கலந்து கொண்ட இந்த அவசரக் கூட்டத்துக்கு திரு. என். செல்லப்பா தலைமை தாங்கினுர்.

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட முன்னுள் உதவி வித்தியாதிபதி திரு. எஸ். யு சோமசேகரம் பேசுகையில் கூறியதாவது:

முதலாம் வகுப்பிலிருந்து உயர்தர வகுப்புகள்வரையும் தடையின்றி வகுப்பேற்றப்பட இப்பொழுது அரசாங்கம் வழிவகைகள் செய்திருக்குப்போது சில கல்லூரிகளில் புகுமுகப் பரீட்சை வைத்துப் பாரபட்சமான முறையில் மாணவர்கள் சேர்க்கப்படுகிருர்கள். இதனுல் பல மாணவர்கள் பாடசாலைகளில் இடம் கிடையாது தெருவழியே வீணே காலம் கழிக்கிருர்கள்.

இந்தப் புகுமுகப் பரீட்சைகளை நடத்தாது அந்தந்தக் கல்லூரிகளுக்கு அண்மையில் உள்ள மாணவர்கள் அந்தந்தக் கல்லூரிகளில் கல்வி பயில்வதற்கு பெற்ருேர் ஆசிரியர் சங்கங்கள் முயற்சி எடுக்க வேண்டும்.

மேற்படி கல்லூரியில் -6ம் வகுப்பு நீக்கப்பட்டால் அதை எதிர்த்து நடவடிக்கை மேற்கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது. [வி. நி.]

## வானெலி நிகழ்ச்சிகள்

### புதன் 3-1-68

### இலங்கை

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு, 7-30 குரல்வகை, 8-00 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 மாதர்விருப்பம்.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 குரல்வகை.

இரவு 6-15 தாளவாத்தியக்கச்சேரி, 6-45 பாவளம், 7-00 கிராமசஞ்சிகை, 7-00 விவாதமேடை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 இசைக்கச்சேரி — எம். கே. பத்மநாதன், 10-30 புனிதகுர்ஆன் ஓதல்.

### திருச்சி 1

காலை 6-30 வந்தே மாதரம், 6-50பக்திப்பாடல்கள், 6-55 அறஉரை, 7-00 திருப்பாவை — திருவெம்பாவை, 7-30 இசைமாலை, 8-15 வயலின் — வி. சுந்தரேசன்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 பெண்ணுலகம், 1-50 இசைமஞ்சரி.

மாலை 5-30 திரைப்பட இசை.

இரவு 6-15 இசைவிழா — சென்னையிலிருந்து அஞ்சல், 7-30 விவசாயிகளுக்கு, 8-00 இசைவிழா அஞ்சல், 9-15 இரண்டாவது உலகத் தமிழ் மகாநாடு வானெலி தொகுப்புரை, 10-35 இசைவிழா அஞ்சல்.

### மதராஸ் 1

காலை 6-00 வந்தேமாதரம், 6-05 துதிப்பாடல்கள், 6-15 திருப்பாவை — திருவெம்பாவை, 6-30 நிகழ்ச்சிக் குறிப்புகள், 6-35 அருள்வாக்கு, 6-45 இசைஅமுதம், 7-30 மெரினு கடற்கரைச் சித்திரம், 8-00 வாத்திய இசை, 8-15 பாட்டு — எஸ். குப்புஸ்வாமி, 8-45 திரைகானம், 9-15 வயலின், 9-45 வாத்திய இசை, 10-00 பாட்டு, 10-30 மதுரகீதம்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 வயலின், 1-00 பெண்ணுலகம், 1-30 வாத்தியக்கோஷ்டி, 1-45 திரைகானம்.

மாலை 5-30 பாடற்பயிற்சி, 5-45 மெல்லிசை.

இரவு 6-15 இசைவிழா, 7-30 நம் விவசாயிகளுக்கு, 8-00 இசைவிழா அஞ்சல், 9-15 உலகத் தமிழ் மகாநாடு கருத்தரங்கின் தொகுப்புரை, 10-30 இசைவிழா அஞ்சல்.

## இசைவிழா இன்றைய நிகழ்ச்சிகள்

சென்னையில் இப்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கும் இசைவிழா இன்றைய நிகழ்ச்சிகள்:—

தமிழிசைச்சங்கம்

மாலை 4 மணி

அயலூர் கிருஷ்ணன் பாட்டு, டி. என். கிருஷ்ணன் பிடில். வேலூர் ராமபத்திரன் மிருதங்கம்:

மாலை 6 மணி

சீர்காழி கோவிந்தராஜன் பாட்டு, மாஸ்டர் சந்திரசேகரன் பிழ்ல். மதராஸ் ஏ. கண்ணன் மிருதங்கம், சி பி. எஸ் பாஸ்கரன் கஞ்சிரா, பாலக்காடு சுந்தரம் கடம், ஆர். வி. பக்கிரிச்சாமி முகர்சிங்.

இரவு 9-30 மணி

எம். பி. என். சேதுராமன், எம். பி. என். பொன்னுச்சாமி நாகசுரம், வலயப்பிட்டி சுப்பிரமணியம், கலியமூர்த்தி தவில்.

இந் நிகழ்ச்சிகள் ராஜா அண்ணமலை மன்றத்தில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (அள. நி.)

## யாழ்ப்பாணத்தவர் பற்றி கம்பஹா எம்.பி.

கொழும்பு, செவ்.

'யாழ்ப்பாணத்தில் நூற்றுக்கு 35 வீதமான தமிழர்கள் தமிழரசு தமிழ்க்காங்கிரஸ் கட்சிகளை ஆதரிக்கவில்லை. இவர்கள் முற்போக்கு சக்திகளையே ஆதரிக்கின்றனர்.'

பட்டேமுல்லை சந்தியில் நடந்த பகிரங்க கூட்டமொன்றில் கம்பஹா எம். பி யும் சுதந்திரக் கட்சி உறுப்பினருமான திரு. எஸ். டி பண்டாரநாயக்கா மேற்கண்டவாறு கூறினுர்.

அவர் மேலும் கூறியதாவது: யாழ்ப்பாணத்திலுள்ள தமிழர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் திரு. பொன்னம்பலம் திரு செல்வநாயகம் ஆகிய தலைவர்களுக்கு எதிராக நடக்கின்றனர். இந்த மூன்றிலொரு பகுதியினரும் முற்போக்கு எண்ணம் கொண்டவர்கள்.

முதலாளித்துவ வாதிகளுக்கு தலைவணங்கும் திரு தொண்டமான், தோட்டத் தொழிலாளர்களை நடுவழியில் கைவிட்டுவிட்டார் [illegible]

## இ. போ, ச. தலைவரின் வேண்டுகோள்

இலங்கை போக்குவரத்து சபையின் தலைவரான திரு. ஆர். டி. சில்வா அதன் 40,000 ஊழியர்களுக்குப் பின்வருமாறு ஒருசெய்தியை அனுப்பியிருக்கிருர்:—

தனியார் துறைகளிலோ அரசாங்கத் துறையிலோ வேலைபார்த்தபடி நாட்டுக்குத் தொண்டாற்றுகிறவர்களில் பெரும்பான்மையோர் பஸ்களில் பிரயாணம்செய்கிருர்கள். வருங்காலத்தில் எமது இடத்தைப் பெறப்போகின்ற மாணவர்கள் எமது பஸ்களில் பிரயாணம் செய்கிருர்கள். இக்காரணங்களை நினைவில்வைத்து இ. போ. ச. ஊழியர்கள் பொதுசனத்திற்குத் தம்மாலியன்றகடமைகளைச்செய்ய வேண்டும். — —

## போர் ஓய்வு

சைகோன், ஜன. 2

வியட்னுமில் புத்தாண்டையொட்டிய 36 மணிநேரப் போர் நிறுத்தம் பலதடவைகள் மீறப்பட்டுள்ளன.

நேற்று, தென் வியட்னுமின் வடபகுதியில் நடைபெற்ற ஒரு சண்டையில் 34 தென் வியட்னுமியர் கொல்லப்பட்டனர்.

மெக்கொங் டெல்டாவில் நடைபெற்ற மற்றுமொரு சண்டையில் 60வியட்கொங்கியர் கொல்லப்பட்டனர்.

## சர்வதேச.........

1-ம் பக்கத் தொடர்ச்சி

நிதிகள் பேச அனுமதியளிக்கப்பட்டுள்ளார்கள்.

இம்மகாநாட்டில் அமெரிக்கா, ரஷ்யா, இலங்கை, ஆஸ்திரியா, செக்கோஸ்லவாக்கியா, ஹொங்கொங், தேசிய சீனு, டென்மார்க், கனடா, பின்லாந்து. கிழக்கு ஜெர்மனி, மேற்கு ஜெர்மனி, இஸ்ரவேல், இத்தாலி இந்தோனேஷியா, இங்கிலாந்து, ஜப்பான், கொரியா மொரிஷியஸ் தீவு, மெக்சிகோ, பிலிப்பைன்ஸ் போலந்து, ருமேனியா. ஸ்பெயின், தாய்லாந்து, ஒல்லாந்து, உருகுவே, தென் வியட்னும், சிங்கப்பூர், மலேஷியா ஆகிய நாடுகளிலிருந்து நூற்றுக்கணக்கான பிரதிநிதிகள் கலந்துகொள்வார்கள். இவர்களில் பலர் சென்னைக்கு வந்து சேர்ந்துவிட்டனர்.

1966ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் மலேஷியாவில், முதலாவது உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டை நடத்துவதற்காகப் பெரும் பங்கு எடுத்துக்கொண்ட மலேஷியா சர்வகலாசாலை இந்தியத்துறைப் பிரிவுத் தலைமை அதிகாரி வணக்கத்துக்குரிய பேராசிரியர் தனிநாயக அடிகள் சென்னைக்கு வந்து சேர்ந்துவிட்டார். ஐக்கிய நாடுகள் சபையின் கல்விவிஞ்ஞானப் பண்பாட்டுக்குழுவின் உபதலைவர் டாக்டர் எம். ஆதிசேஷையாவும் கலந்துகொள்வார்.

முதன்முறையாக ரஷ்யா, ருமேனியா, செக்கோஸ்லவாக்கியாபோன்ற கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து தமிழ் ஆராய்ச்சியாளர்களும, இம்மகாநாட்டில் கலந்துகொள்ளவிருக்கிருர்கள்.

உலக தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டையொட்டி இன்று துறைமுக தொழிலாளருக்கு விடுமுறை அளிக்கப்படுகிறது. துறைமுகத் தொழிலாளர் போர்ட்டின் கீழ் வேலைசெய்யும் தொழிலாளருக்கும் விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

இம்மகாநாட்டில் மலேசியாவிலிருந்து 38 பிரதிநிதிகள் கலந்துகொள்வார்கள். உலகத்தமிழ் மகாநாடு சம்பந்தமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள எல்லா வைபவங்களுக்கும் கட்டுப்பாடின்றி [illegible]

# இந்திய ராஷ்டிரபதி சென்னை சேர்ந்தார்

சென்னை, ஜன. 2

இந்திய ராஷ்டிரபதி டாக்டர் சாகீர் ஹுசெயின் இன்று சென்னை வந்து சேர்ந்தார்.

அவர் நாளைக்காலை, சென்னையில் நடைபெறும் உலகத் தமிழாராய்ச்சிமகாநாட்டையொட்டி எடுத்துச் செல்லப்படும் மாபெரும் அலங்கார ஊர்வலத்தைப் பார்வையிடுவார். பின்னர், மாலையில், சென்னை மரீனு கடற்கரையில், ராஷ்ரபதி மகாநாட்டைத் திறந்து வைத்துப் பேசுவார்.

இன்று ராஷ்டிரபதி டாக்டர் சாகீர் ஹுசெயின், முன்னுள் இந்திய கவனர்-ஜெனரல் சக்கரவத்தி இராஜகோபாலாச்சாரியாரையும் சந்தித்துப் பேசவிருக்கிருர்.

வியாழக்கிழமையன்று மதுரை செல்லும் ராஷ்டிரபதி அங்கு ஒரு மசூதியில் நடைபெறும் ஈத் பிரார்த்தனையில் பங்குபற்றுவார். பின்னர் சென்னை திரும்பி வெள்ளிக்கிழமை காலை அங்கிருந்து அவர் ஒரிஸ்ஸா செல்வார்.

## சரித்திரத்தின் முக்கிய கட்டத்தில் இருக்கிறேம் — சிறிமா

கொழும்பு, செவ்வாய்

"நாட்டின் பிரச்னைகளைத் தீர்க்காத காரணத்தால் அரசாங்கம் உடனடியாக கலைக்கப்பட்டு தேர்தல் நடைபெறவேண்டும்."

நாத்தாண்டியா தொகுதியில் சுதந்திரக்கட்சி அபேட்சகர் திரு. திஸராவை ஆதரித்துப் பேசிய திருமதி சிறிமாமோ பண்டாரநாயக்கா மேற்கண்டவாறு கூறினுர்.

திருமதிபண்டாரநாயக்கா மேலும் கூறியதாவது:

நாணயமதிப்புக் குறைப்பு ஏழைகளின் வயிற்றில் அடித்துவிட்டது. இந்நாட்டுச் சரித்திரத்தில் ஒரு முக்கியமான கட்டத்தில் மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர்.

மக்களின் ஆதரவுடன் நாங்கள் மீண்டும் ஆட்சிக்கு வரும்போது காலஞ்சென்ற பண்டாரநாயக்காவின் கொள்கையை கடைப்பிடித்து மக்களை வழி நடத்துவோம்.

சமசமாஜக் கட்சித் தலைவர் டாக்டர் என். எம். பெரேரா கூறியதாவது:

'தேசிய அரசாங்கம் இந்த நாட்டை சமஷ்டிக்கட்சியின் ஆதரவுடன் ஆட்சி புரிகிறது. சமஷ்டிக்கட்சியினர் அரசாங்கத்திலிருந்து வெளியேறினுல் அரசாங்கம் வீழ்ச்சியடைந்து விடும்.

நாட்டில் நடைபெறும் சம்பவங்களைப் பொதுமக்கள் நாளுக்குநாள் அவதானித்துக்கொண்டு வருகின்றனர். அப்படியான மக்கள், ஐக்கிய தேசியக்கட்சியின் தேர்தல் பிரசாரத்தில் ஏமாந்து விடமாட்டார்கள். அரசாங்கத்தின் அத்திபாரம் ஆட்டம்கண்டுவிட்டது. மிக விரைவில் அரசாங்கம் தானுகவே வீழ்ந்துவிடும்.

திரு. மைத்திரிபால சேனநாயக்கா பேசும்போது அரசாங்கம் முதலாளிகளினதும், சமஷ்டிக்கட்சியினதும் தாளத்திற்கு ஏற்றபடி ஆட்சி செலுத்திவருகிறதென்றும், இந்த நிலைமை நீடிக்காதென்றும் கூறினுர்

## ஏகாதசி விழா

யாழ்ப்பாணம், புதன்

பொன்னுலை வரதராசப் பெருமாள் கோவில் ஏகாதசிவிழா இன்று காலை 6மணிக்கு கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகி, பத்து நாட்கள் நடைபெறும்.

## வெள்ளையருக்கு....

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

டர்கள் விசாரித்தனர். நோயாளி ஒப்புக்கொண்டதைத்தொடர்ந்து இருதயம் பொருத்தப்பட்டது. ஆபரேஷன் நடப்பதற்கு 15 நிமிடங்களுக்கு முன்னர் தான் கறுப்பரான வாலிபர் மூளை வியாதியினுல் மரணமானுர். இந்த சாதனைக்கு பொறுப்பாய் இருந்தவர் பேராசிரியர் பெர்னுர்ட் என்பவர். நோயாளி சௌகரியமாய் இருப்பதாக அறிவிக்கப்பட்டது.

## தமிழுக்கும்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மக்கள், இந்தி தம்மீது திணிக்கப்பட விடமாட்டார்களென்றும், அண்ணுவுக்கு அவர்கள் கடமைப்பட்டுள்ளார்களென்றும் கூறினுர்.

தமிழக கல்விமந்திரி திரு. இரா. நெடுஞ்செழியன், தமிழ்மொழி வளர்ச்சிக்கு அண்ணு ஆற்றியுள்ள அருஞ்சேவையை நாம் நினைவுகூர வேண்டுமென தமது வரவேற்புரையில், வலியுறுத்தினுர்.

பொதுப்பணித்துறை மந்திரி திரு. கருணுநிதி, அண்ணுவின் சிலையைத் தமிழக அரசின்சார்பில். பெற்றுக்கொண்டார்.

சென்னை மவுண்ட் ரோட்டில் ரௌண்டானுவில் இச்சிலை வைக்கப்பட்டுள்ளது.

## மர்ம மரணங்கள்

சாண்டோ டொமிங்கோ, ஜன. 2

டொமினிக்கன்குடியரசில், மர்மமாகப் பலர் இறந்துள்ளனர். வாயில் நுரைதள்ள இவர்கள் மரணமாகியுள்ளது, இங்குள்ள அதிகாரிகளுக்குப் புதிதாக உள்ளது. சரியான காரணத்தைஅவர்களால் விளக்கமுடியவில்லை.

இம்மாதம் இவ்விதம் மர்ம மரணமடைந்தவர்கள் தொகை 22 ஆக உயர்ந்துள்ளது.

## புனிதவளன் நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், செவ்.

குருநகர் புனிதவளன் விளையாட்டுக்கழகப் புதிய நிர்வாகிகள் விபரம் வருமாறு:

போஷகர்கள்: வண. பிதா. பெனற் கொன்ஸ்ரன்ரைன், திரு. எஸ். பி. நீக்கிலஸ், பி. இராசநாயகம், இ. பின்ரன், திருமதி. அன்ரஸ் இராஜேந்திரா, தலைவர் அ. யேசுதாசன், உபதலைவர்: ம. ஆரோக்கியநான், செயலாளர் பி, மத்தியூஸ், உபசெயலாளர் செல்வன் செ. ஜெயக்குமார், பொருளாளர்: அ. அகஸ்ரின், விளையாட்டுச் செயலாளர் எஸ், அன்டன் செல்வராசா, உதவிச் செயலாளர் செல்வன் கி. லோறன்ஸ், கணக்குப் பரிசோதகர் ஆ. ஞானப்பிரகாசம். [நி

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தா[illegible] யாழ்ப்பாணம் [illegible] கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்தி[illegible] அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு ஜனவரி[illegible] 3-ந் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.